**தலைப்பு 282 – நீர்ப்பாசனத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 01 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளதென்றும்,

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.2 மற்றும் 1.6.3 ஆம் பந்திகளில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தொடர்பாக முன்னைய ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிநிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்திற்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களில் 398 விடயங்களின் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் நிதியல்லா சொத்துக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிதியல்லா சொத்துக்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் சரியாக உள்ளடக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

### 1.6.2 பதிவேடுகள் மற்றும் பத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) காசேடு | | |
| நிதிப் பிரமாணம் 446 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் | நிதிப் பிரமாணம் 446 இல் குறிப்பிடப்பட்ட | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் 04 பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அலுலகங்களில் காசேடு நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. | ஏற்பாடுகளின் பிரகாரம் காசேடு நாளது வரையாக்கப்பட வேண்டும். | |
| (ஆ) | இருப்பு புத்தகம்<br>---------------------------- | | |
| | நிதிப் பிரமாணம் 751 மற்றும் 763 இன் பிரகாரம் முத்துக்கெலியாவ நீர்ப்பாசன வேலைத்தளத்தின் இருப்பு புத்தகம் நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணம் 751 மற்றும் 763 இன் பிரகாரம் இருப்பு புத்தகம் நாளது வரையாக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (இ) | காசோலைகள் கையளிக்கும் பதிவேடு<br>--------------------------------------- | | |
| | 04 பிரதேச நீர்ப்பாசன அலுவலகங்களில் நிதிப் பிரமாணம் 139(5) இன் பிரகாரம் காசோலைகளை கையளிக்கும் போது உரித்தாளியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தும் வகையில் காசோலை கையளிக்கும் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 139(5) இன் பிரகாரம் உரித்தாளியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தும் வகையில் காசோலை பதிவேடு பேணிச் செல்லப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ஈ) | பிணைப் பதிவேடு<br>--------------------------------- | | |
| | நிதிப் பிரமாணம் 891 இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கி பிணைப் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 891 இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தரின் தகவல்களை உள்ளடக்கி பிணைப் பதிவேடு பேணிச் செல்லப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

**1.6.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **அவதானிப்புக்கள்** | | | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை | | | |
| (i) | XIX ஆம் அத்தியாயத்தின் 6.13.1 மற்றும் 7.1 ஆம் பிரிவுகள் | அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இல்லங்களை பயன்படுத்துகின்ற உத்தியோகத்தர்கள் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லல், இடம் மாற்றலாகிச் செல்லல் அல்லது சேவையை கைவிட்டு செல்கின்ற போது அந்த உத்தியோகபூர்வ இல்லங்களை ஒதுக்கித்தந்த அதிகார தரப்பினருக்கு கையளிக்க வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தின் 17 உத்தியோகபூர்வ இல்லங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்றுச் செல்வதற்கு முன் உத்தியோகபூர்டவ இல்லங்கள் கையளிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ii) | XXIV ஆம் அத்தியாயத்தின் 3:18:1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் இறுதி வரையில் சம்பளமற்ற விடுமுறை பெற்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதியின் பெறுமதி ரூபா 1,741,987 ஆகக் காணப்பட்டது. | பிணையாளரிடம் இருந்தோ அல்லது பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடம் இருந்தோ கடனை | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் 06 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட கடன் மீதி ரூபா 167,066 ஆகும். அதன் பிரகாரம் கடனை அறவிடல் தொடர்பாக தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| (iii) | XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவு | ஓய்வுபெற்றுச் சென்ற 150 உத்தியோகத்தர்களிடம் இருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய கடன் பணம் ரூபா 13,306,578 ஆக இருந்ததுடன், அது தொடர்பாக தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனிடையே 10 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 627,486 தொகையான கடன் தொகை 05 வருடங்களுக்கும் மேற்பட்ட பழைய கடன் மீதியாகும். | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (iv) | XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவு | மரணமடைந்த 14 உத்தியோகத்தர்களிடம் இருந்து அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 1,636,392 ஆக காணப்பட்டதுடன், அதில் 02 வருடங்களுக்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான காலப்பகுதிக்குரிய கடன் மீதி ரூபா 281,647 ஆக காணப்பட்டதுடன், 05 | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வருடங்களை விட மேற்பட்ட காலமான கடன் மீதி ரூபா 301,669 ஆகும். அதன் பிரகாரம் அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய பணம் பிரதான கடன் காரரிடம் இருந்து அறவிட முடியாதுள்ள சந்தர்ப்பங்களின் போது அது தொடர்பாக தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>----------------------------------- | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 127 | பிரதான அலுவலகத்தினால் நிதி ஏற்பாடு ஒதுக்கப்படாதிருக்கும் போது மொனராகலை வலய நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் இரண்டு பணிகளுக்கு உரியதாக 05 வழங்குனர்களுக்கு ரூபா 9,980,060 தொகையான 05 காசோலைகள் வழங்கப்பட்டிருந்தன. | நிதிப் பிரமாணம் 127 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ii) | நிதிப்பிரமாணம் 213 | பத்மெடில்ல இடது பக்க வாய்க்காலின் சேற்று மண் அகற்றும் வேலை தொடர்பாக தொழிலாளர்களை ஈடுபடுத்தும் போது நாளாந்த சம்பளம் பெறுகின்ற தொழிலாளர்கள் தொடர்பாக நாளாந்த வேலை விபரம் (செக்ரோல்) பேணப்பட வேண்டியிருந்தது. மேலும் | நிதிப் பிரமாணம் 213 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வரவு பதிவிடல் பணிகள் விஷேடமாக கையளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் பரீட்சிக்கப்பட வேண்டியிருந்தது. எனினும், கந்தகெட்டிய பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம் மேற்கூறப்பட்ட தேவையினை நிறைவேற்றாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (iii) | நிதிப்பிரமாணம் 260, 139 | பத்மெடில்ல இடது பக்க வாய்க்காலின் சேற்று மண்ணை அகற்றும் வேலையின் போது தொழிலாளர்கள் மற்றும் காவலிகளாக ஈடுபடுத்தப்பட்ட ஊழியர்களுக்கு சம்பளம் செலுத்துகின்ற சந்தர்ப்பத்தின் போது உரித்தாளிகளின் அடையாளம் உறுதிப்படுத்தப்படாமல் பணம் செலுத்தப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 260 மற்றும் 139 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் திணைக்களத்தால் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்காக திறைசேரியில் இருந்து கோருவதற்கு திட்டமிடப்பட்டிருந்த மொத்த கட்டுநிதி தேவை ரூபா | திட்டமிடப்பட்ட பிரகாரம் கட்டுநிதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | 18,726,342,000 ஆக இருந்த போதிலும், திறைசேரியினால் வழங்கப்பட்ட கட்டுநிதி ரூபா 14,307,927,000 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் திறைசேரியில் இருந்து கிடைக்கப்பெறாத கட்டுநிதி, கோருவதற்கு திட்டமிடப்பட்ட கட்டுநிதியில் 23.6 சதவீதம் ஆக காணப்பட்டது. | | |
| (ஆ) | 7002/0000/00/0040/0017/00 ஆம் இலக்க கணக்கிற்குரிய ரூபா 5,853,293 கட்டுநிதி மீதியொன்று தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டுநிதி கணக்கில் தீர்த்து வைக்கப்படாத மீதி தீர்த்து வைக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

## 2.2 செலவின முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்பாட்டு வாடகைக் கொள்வனவு முறையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களுக்காக வாடகை தவணை செலுத்துவதற்கு நிகழ்ச்சித் திட்டம் 1 இன் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 28,000,000 தொகையான மொத்த தேறிய ஒதுக்கத்தில் ரூபா 15,442,184 தொகை நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் ரூபா 12,557,816 தேறிய ஒதுக்கமும் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதி ஏற்பாட்டை செலவிடல் மற்றும் கட்டுநிதியை பெற்றுக்கொள்ளல் திட்டமிடப்பட்ட பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ஆ) | மதிப்பீடு தயாரிக்கும் போது தேவையினை இனங்காணமல் நடவடிக்கை எடுத்தல் மற்றும் திட்டமிடப்பட்ட பிரகாரம் வேலை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை போன்ற காரணங்களினால் 09 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட | திட்டமிடப்பட்ட பிரகாரம் நிதி ஏற்பாட்டினை பெற்றுக்கொள்ளல் மற்றும் செலவிடல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | மொத்த கூட்டுத் தொகை ரூபா 12,827,920,894 மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் கூட்டு மொத்தமாக ரூபா 4,123,919,568 சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு 16 சதவீதம் முதல் 35 சதவீதத்திற்கு இடையிலான வீச்சினை கொண்டிருந்தது. | | |
| (இ) | நிதி ஏற்பாடு தேவையினை உரிய பிரகாரம் இனங்காணப்படாமல் செலவின விடயங்களுக்கு இடையே நிதி மாற்றப்பட்டதன் காரணமாக 02 மூலதன செலவின விடயங்களுக்காக அவ்வாறு ஏனைய செலவின விடயங்களில் இருந்து மாற்றப்பட்ட ரூபா 86,059,000 தொகை முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | தேவையினை சரியாக இனங்கண்டு நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ஈ) | மூலதன செலவின விடயத்தின் கீழ் காணி மற்றும் காணி அபிவிருத்தி செய்வதற்காக குறைநிரப்பு மதிப்பீடொன்றில் பெறப்பட்டிருந்த ரூபா 300,000,000 தொகையான மொத்த தேறிய நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதி ஏற்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு முன் பணிகளை சரியாக நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

**2.3 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பில் ரூபா 10,000 தொகையான பிழையான "வரவு" வைத்தல் மற்றும் ரூபா 13,621 தொகையான பிழையான "செலவு" வைத்தல் காணப்பட்டது. | கணக்கு வைத்தல் சரியாக நிறைவேற்றப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற மரணமடைந்த 07 ஊழியர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 583,316 தொகையான கடன் பணம் தொடர்பாக தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதில் 02 கடன்காரார்களிடம் இருந்தும் அறவிட வேண்டிய ரூபா 301,697 தொகையான கடன் பணம் 05 வருடங்களை விட பழமையானதாக இருந்தது. | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவு மற்றும் தேசிய பாதீட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2004 ஒக்தோபர் 11 ஆம் திகதிய 118 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

**2.4 முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்த்தல்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் 66 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,229,100 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உபகட்டு நிதியைத் தீர்ப்பதற்காக உரிய முற்பணம் பெறப்பட்ட பணிகள் முடிவடைந்து ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலம் வரை தாமதப்படுத்தப்பட்டிருந்தது. | பணிகள் நிறைவு பெற்றதும் உடனடியாக முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

## 2.5 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 6000/0000/00/0016/0008/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் உள்ள ரூபா 4,156,503 தொகையான வைப்பிற்காக 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், நிதிப் பிரமாணம் 570 இன் பிரகாரம் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 570 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) யுதகனாவ குளத்தின் பிரதான மதகை நிர்மாணிப்பதற்கு ரூபா 4,726,000 கிரயமான ஆரம்ப மதிப்பீடொன்று தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், மேலதிக வேலைப் பகுதியை உள்ளடக்கும் வகையில் ரூபா 5,978,000 தொகையான மதிப்பீடொன்று பின்னர் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. முழுமையான மேற்பார்வை மற்றும் திட்டமிடல் இன்றி மதிப்பீடு தயாரிக்கப்பட்டதன் காரணமாக ஆரம்ப மதிப்பீட்டு தொகையை விட 126.5 சதவீதத்தினால் மதிப்பீட்டுத் தொகை அதிகரிக்கப்பட்டிருந்தது. | முழுமையான மேற்பார்வையுடனும் திட்டமிடலுடனும் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ராத்திரி குளத்தின் மீள் நிர்மாணத்திற்கான ஆரம்ப மதிப்பீட்டில் பிரதான மதகை நிர்மாணிப்பதற்கு ரூபா 2,000,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. பின்னர் அந்த வேலைப் பகுதி மற்றும் மதகின் மேலதிக வேலைப் பகுதியை பூர்த்தி செய்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீடு ரூபா 16,906,000 ஆக இருந்ததுடன், அது ஆரம்ப நிதி ஏற்பாட்டை விஞ்வி 845 சதவீதமாக இருந்தது. | சரியாக திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (இ) | ரதான குளத்தின் நிர்மாணங்களை ஆரம்பிப்பதற்கு முன் அதற்குரிய திட்டங்களை தயாரிக்காமல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டமை மற்றும் வேலை பூர்த்தி செய்வதற்கான கால அட்டவணை தீர்மானிக்கப்படாமல் 2019 யூன் 01 ஆம் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக குளத்தின் மீள் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்வதற்கு எடுக்கப்படுகின்ற காலம் நிர்ணயிக்கப்பட்டிருக்க வில்லை. | சரியாக திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

## 3.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | யுதகனாவ குளத்தின் பிரதேசவாசிகளினால் நிர்மாணிக்கப்பட்ட பாலத்தினால் வான் பகுதியிலிருந்து வெளியேறுகின்ற நீர் வழிந்தோடி செல்வதற்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தது. அந்த பாலத்தினை அகற்றுதல் அல்லது வான் பகுதியிலிருந்து வெளியேறுகின்ற நீர் தடைகளின்றி வழிந்தோடி செல்வதற்கான முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ஆ) | கெஸெல்லந்த குளத்தின் வான் கதவு பழுதுபார்ப்பதற்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 4,000,000 தொகையான மதிப்பீடொன்று தயரிக்கப்பட்டு நிதி ஏற்பாடு பெறப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியான 2019 செப்தெம்பர் 19 ஆம் திகதி வரையும் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

## 3.3 பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வெல்லஸ்ஸ நவோதய செயற்திட்டத்திற்காக அமைச்சரவை தீர்மானம் பெற்றுக்கொள்ளும் போது | விடயப்பரப்பிற்கு உரித்தற்ற பணிகள் அமைச்சரவை | விவசாயத்தினை ஆக்கபூர்வமானதாக கட்டியெழுப்புவதன் மூலம் |

| | | |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைக் குறிப்பில் நீர்ப்பாசன செலவின விடயத்தில் உள்ளடக்கப்படாத வெளிப்பணிகளும் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் விவசாயக் கைத்தொழில் விரிவாக்கல் சேவைப் பயிற்சி, கண்காட்சி நிகழ்ச்சித் திட்டங்கள், வியாபார மற்றும் களஞ்சிய வசதிகள் மற்றும் கிரமிய மற்றும் நகர உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி என்ற பணிகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன. | குறிப்பில் உள்ளடக்கப்பட முடியாது. | மாவட்டத்தின் விவசாய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்வடையச் செய்யும் நோக்காகக் கொண்டு வெல்லஸ்ஸ நவோதய செயற்திட்டம் திட்டமிடப்பட்டிருந்தது. நீர்ப்பாசன/அமைச்சு/06/ 2015 இன் கீழ் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்து. அதன் பிரகாரம் உரிய உள்ளடக்க விடயங்கள் மேற்கூறப்பட்ட அமைச்சரவைக் குறிப்பில் மேவுகைசெய்யப்பட்டுள்ளது. |

## 3.4 எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் பெற்றுக் கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வெல்லஸ்ஸ நவோதய செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் ரூபா 196,878,000 தொகையான 06 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக எதிர்பார்த்த பெறுபேறுகள் பிரதேசத்தின் விவசாய மக்களுக்கு கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. | செயற்திட்டங்களை திட்டமிடல், ஆரம்பித்தல் மற்றும் அமுல்படுத்துதல் சரியான முகாமைத்துவத்துடன் நிறைவேற்றப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ஆ) | வெல்லஸ்ஸ நவோதய செயற்திட்டத்தின் கீழ் உனகொல்ல கெவல்வல வாய்க்கால் நிர்மாணத்திற்காக ரூபா 11,336,978 தொகை விடுவிக்கப்பட்டு நீண்ட காலம் கடந்திருந்த போதிலும், 2019 யூலை வரை வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியான திட்டமிடலுடனும் மேற்பார்வையின் கீழும் செயற்திட்டங்களை ஆரம்பித்தல் மற்றும் அமுல்படுத்துதல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கெஸெல்லந்த குளக்கட்டு அமைப்பதற்கான அளவிடை பத்திர விடயங்களில் இலக்கம் 1.6 இன் கீழ் ரூபா 2,082,888 தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. குளத்தின் குளக்கட்டின் சரிவு 1:3 விகிதத்தில் அமைத்தல் மற்றும் நியமத்திற்கு மண் பரவ (Compaction) வேண்டியிருந்த போதிலும், நியமத்திற்கு புறம்பாக மண் பரப்பட்டிருந்ததுடன் (Compaction) உரிய Compaction அறிக்கையும் பெறப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்திட்டத்தின் வேலைகள் நிறைவேற்றப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ஈ) | கெஸெல்லந்த குளத்தின் மீள் நிர்மாணத்திற்குரிய அளவிடைப் பத்திரத்தில் 1.8 ஆம் விடய இலக்கத்தின் கீழ் குளக்கட்டின் மேல் சரிவு அலைதாங்கி நிர்மாணிப்பதற்காக ரூபா 4,871,650 தொகையான நிதி ஏற்பாடு பெறப்பட்டிருந்தது. கணக்காய்வு திகதியான 2019 செப்தெம்பர் 19 ஆம் திகதி வரையிலும் அந்த அலைதாங்கி நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்ட பிரகாரம் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (உ) | கெஸெல்லந்த குளத்தில் மீள் நிர்மாணத்திற்குரிய அளவிடைப் பத்திரத்தின் 1.10 ஆம் விடயத்தின் கீழ் குளக்கட்டு குறிப்பிடப்பட்ட 1:3 சரிவில் அமைத்து சரியான பிரகாரம் புற்பிடிகளை பதிப்பதற்காக ரூபா 854,762 தொகையான நிதி எற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த பணிகள் நியம தரத்தில் மேற்கொள்ளப்படாமையினால் குளக்கட்டு கணிசமான அளவில் பாதிப்பிற்கு உட்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் பணிகள் சரியான பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

## 3.5 எதிர்பார்த்த நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| யுதகனாவ குளக்கட்டின் அலைதாங்கி நிர்மாணித்தல் மற்றும் குளத்தின் அடிப்பதியை அமைக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்பட்டமையினால் பிரதேசத்தின் விவசாய மக்களுக்கு 05 பயிர்ச்செய்கை போகங்களில் பயிர் செய்ய முடியாதிருந்தது. | குளம் மற்றும் நீர்த் தேக்கங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

## 3.6 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் போது யுதகனாவ குளத்தின் அலைதாங்கி நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்காக ரூபா 35,883,000 தொகையான மதிப்பீட்டின் கீழ் குளத்தின் அடிப்பகுதியினை தயாரிக்கும் நடவடிக்கைகளையும் நிறைவேற்றுவதற்காக ரூபா 33,372,000 தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், 2019 செப்தெம்பர் வரையிலும் அந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | குளம் மற்றும் நீர்த் தேக்கங்களின் மீள்நிர்மாண நடவடிக்கைகள் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

## 3.7 பெறுகைகள்

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மொனராகலை வலய நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தின் மூலம் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடம் இருந்து 12 மில்லி மீற்றர் அளவில் ருறுக்கு கம்பிகள் கொள்வனவு செய்வதற்காக கூறுவிலை கோரப்பட்டதுடன், 05 வழங்குனர்களிடம் இருந்து கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. பதிவு செய்துள்ள வழங்குனர்களில் எவ்வளவு பேரிடமிருந்து கூறுவிலை கோரப்பட்டிருந்தது என்ற விபரங்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. கூறுவிலை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்ட கடிதத்திலேயே கூறுவிலைகள் குறிப்பிடப்பட்டு அனுப்பப்பட்டிருந்ததுடன், அந்த கடிதம் உரிய நிறுவனத்திற்கு அனுப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்படவில்லை. | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

## 3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | திணைக்களத்திற்கு சொந்தமான 45 வாகனங்கள் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிந்ததுடன், வெளி நிறுவனங்களில் இருந்து பெறப்பட்டிருந்த ரூபா 37,700,000 பெறுமதியான 12 வாகனங்களின் உரித்து தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட வாகனங்கள் மற்றும் வெளி நிறுவனங்களிடம் இருந்து பெறப்பட்ட வாகனங்கள் அந்த நிறுவனத்திற்கு கையளிப்பதற்கு அல்லது மீண்டும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 ஆம் ஆண்டில் 5000 கிலோ மிற்றருக்கு குறைவாக ஓடிய 21 மோட்டார் வாகனங்கள் காணப்பட்டதுடன், அந்த 21 மோட்டார் வாகனங்களின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 24,675,000 ஆகும். | சொத்துக்களை வினைத்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (இ) | யுதகனாவ வேலைத்தளத்திற்கு பொறுப்பான பொறியியல் உதவியாளரினால் பேணிச் செல்லப்பட்ட வேலைத்தளத்தின் பொருட் பதிவேட்டு புத்தகத்தின் பிரகாரம் ரூபா 137,100 பெறுமதியான மிகுதி உருக்கு கம்பிகள் 01 மெற்றிக் தொன் அளவில் களஞ்சிய பொறுப்பாளருக்கு கையளிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த இருப்பு களஞ்சியத்திற்கு கிடைத்திருந்தமைக்காக இருப்பு புத்தகத்தில் எந்தவொரு பதிவும் காண்பிக்கப்படாதிருந்ததுடன், அந்த கம்பி இருப்புக்கள் களஞ்சிய பொறுப்பாளரினால் கையேற்கப்பட்மைக்கான பெறுவனவு குறிப்பும் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | களஞ்சிய பொருட் பதிவேட்டுப் புத்தகம் / பதிவேடுகள் சரியாக நாளது வரையாக பேணிச் செல்லப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். றதான வேலைத்தளப் பொறுப்பு பொறியியல் உதவியாளருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. அவரின் மாதாந்த பொருள் அறிக்கைகளிலும் பதியப்பட்டுள்ளது. |
| (ஈ) | 29 கட்டிடங்களுடன் கூடிய மொனராகலை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் முகாம் அமைக்கப்பட்ட நிலத்திற்காக அளவிடல் அறிக்கை மற்றும் அளவிடப்பட்ட நில வரைபடம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் முகாம் அமைந்துள்ள காணியின் அளவு எவ்வளவு எனவும், எல்லைகளை குறிப்பாகவும் இனங்காண முடியாதிருந்ததுடன், அதனால் நிலத்தின் பாதுகாப்பு (வெளி நபர்களினால் நிலம் கைப்பற்றப்படுகின்றமை) அச்சுறுத்தலுக்கு உட்பட்டிருந்தது. | அரசாங்கத்தின் காணி மற்றும் சொத்துக்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மொனராகலை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் முகாம் காணியில் 02 பௌஸர்கள், பௌஸர் பெட்டியொன்று, வென் ஒன்று, பெப் டம்பயர் இயந்திரம் எனடபன 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. அந்த இயந்திரம் மற்றும் உபகரணங்களை பழுர்பார்த்து பயன்படுத்துவதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்துவதற்கு முடியாத இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

## 3.9 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------------- | --------------- | ------------------------------------ |
| (அ) | மொனராகலை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலக முகாம் அமைந்துள்ள காணிக்கு உள்நுழையும் கதவிற்கு அருகில் முகாம் காணியில் ஒரு பகுதி வெளித்தரப்பினரால் கைப்பற்றப்பட்டிருந்ததுடன், காணியை கைப்பற்றிய நபர் தொடர்பாக தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் அவ்வாறு கைப்பற்றப்பட்ட காணியின் பகுதி கைவிடப்பட்டு வலையினால் மேவுகை செய்யும் வேலியொன்று நீர்ப்பாசன திணைக்களத்தினால் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | 1982 இன் 12 ஆம் இலக்க பொது ஆதன விடயங்களில் இடம்பெறுகின்ற தவறுகள் தொடர்பாக சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ஆ) | இழப்புகள் மற்றும் நட்டப் பதிவேட்டின் பிரகாரம் 1982 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் ரூபா 20,630,260 தொகையான 39 இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் ஏற்பட்டிருந்தன. அந்த இழப்புக்கள் | நிதிப் பிரமாணம் 103 இன் பிராகரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

மற்றும் நட்டங்கள் ஏற்பட்டு நீண்ட காலம் கடந்திருந்த போதிலும், அவைகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**3.10 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டிற்காக நீர்ப்பாசன திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பௌதீக மற்றும் நிதி செயலாற்றல் செயல்முன்னேற்ற அறிக்கையின் தகவல்கள் வழுக்களுடன் கூடியதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பௌதீக மற்றும் நிதி செயலாற்றல் செயல்முன்னேற்ற அறிக்கை சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ஆ) | 2017 ஆகஸ்ட் 13 ஆம் திகதியில் உள்ளவாறு கெஸெல்லந்த குளத்தில் பழுதுபார்த்தல் ஆரம்பிக்கப்பட்ட போதும், இயந்திர பொறிமுறைகள் மற்றும் வாகனங்களை ஈடுபடுத்தி மண் வேலைகள் மாத்திரம் திட்டமிடல் இன்றி மேற்கொள்ளப்பட்டமையினால் குளத்தின் நீரை தேக்கிவைப்பதற்கு தேவையான எந்தவொரு பணியும் மேற்கொள்ளப்படாமையினால் அந்த பணிகள் கைவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | சரியாக திட்டங்களை தயாரித்து அந்த திட்டங்களின் பிரகாரம் வேலைகள் செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (இ) | பிரதேச மக்கள் பயன்படுத்திக் கொண்டிருந்த கெஸெல்லந்த குளத்தை பழுதுபார்த்து நீர் இயலளவை உயர்வடையச் செய்வதற்காக வெல்லஸ்ஸ நவோதய செயற்திட்டத்தின் கீழ் | செயற்திட்டத்திற்காக செலவினங்களைச் செய்யும்போது இணங்கான முடியுமான வகையில் செலவின அறிக்கை | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | |
|---|---|---|
| ரூபா 43,715,000 கிரய மதிப்பீடொன்று 2017 திசெம்பர் 28 ஆம் திகதி அங்கீகரிக்கப்படட்டிருந்தது. அந்த மதிப்பீட்டின் பிரகாரம் கெஸெல்லந்த குளத்தை மீள் நிர்மாணிப்பதற்காக ஒவ்வொரு விடயத்தின் கீழ் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த விடயங்களின் கீழ் ஏற்பட்ட செலவினங்கள் தெளிவாக இணங்காணக் கூடிய வகையில் செலவின அறிக்கை பேணப்பட்டிருக்கவில்லை. | வைக்கப்பட வேண்டும். | |

4. **நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | நீர்ப்பாசன திணைக்களம் நாடு முழுவதும் அமைந்துள்ள பெரிய அளவிலான 11 நீர்ப்பாசன வலயங்கள் (மகாவலி அதிகாரப் பிரதேசம் தவிர) ஆக்கிரமிக்கும் தாவரங்கள் பரவியுள்ளமை தொடர்பாக 2015 ஆம் ஆண்டில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் போது ஆக்கிரமிக்கும் தாவரங்கள் காணப்படுகின்றமை இனங்பாணப்பட்டிருந்தது. ஆதன் பிரகாரம் ஒட்டுமொத்த நீர்ப்பாசன முறைமையில் அதாவது குளம், குளக்கட்டு, வாய்க்கால் மற்றும் நீர்ப்பாசன ஒதுக்கங்களில் ஆக்கிரமிக்கும் தாவரங்களின் பரவல் சராசரியாக 45 சதவீதமாக இருந்ததுடன் அதன் ஒவ்வொரு நீர்ப்பாசன வலையத்திலும் 27 சதவீதம் முதல் 66 சதவீதம் வரையிலான வீச்சில் பரவலடைந்திருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக வருடாந்த பராமரிப்பு செலவினம் உயர்வடைந்து சென்றமை, வாய்க்கால்கள் | 1999 இன் 35 ஆம் இலக்க தாவர பாதுகாப்பு சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | மூடப்பட்டிருந்தமை மற்றும் நீர் இயலளவு குறைவடைந்திருந்தமை, அமுக்கம் மூலம் மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டமையினால் நீரின் தரமும் பாதிப்புக்குள்ளாகியிருந்தமை, நீர் மாசடைந்திருந்தமை போன்றஅனேகமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | 1999 இன் 35 ஆம் இலக்க தாவர பாதுகாப்பு சட்டத்தின் 1 ஆவது பகுதியின் 3 ஆவது பிரிவின் பிரகாரம் சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்துதல் மற்றும் செயற்படுத்தும் பணிகளுக்காக தங்களுக்கு உதவி வழங்கும் வகையில் நீர்ப்பாசன திணைக்களத்தினால் 24 உத்தியோகத்தர்களுக்கு ‘‘அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள்’’ ஆக 2017 மார்ச் 30 ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்தனர். 2015 ஆம் ஆண்டின் பின்னர் நீர்ப்பாசன முறையில் ஆக்கிரமிக்கும் தாவரங்கள் பரவியுள்ளமை தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்படாதிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது தற்போது அதன் பரவல் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடம் இருந்து எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நீர்ப்பாசன முறைமைக்கு இடையூறான ஆக்கிரமிக்கும் தாவரங்கள் அகற்றப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | |
|---|---|---|
| (இ) நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் தீவு முழுவதும் அமைந்துள்ள பாரியளவிலான நீர்ப்பாசன வலையங்களில் செல்வீனியா மற்றும் ஜப்பன் ஜபர இற்காக தாவர பாதுகாப்பு சேவை மூலம் உயிரியல் கட்டுப்பாட்டு பூச்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதில் ஜப்பன் ஜபர தாவரத்திற்காக அந்த முறைமை வெற்றிகரமாக அமுல்படுத்தப்படாதிருந்ததாக அந்த நிறுவனத்தினால் வெளியிடப்பட்டிருந்தது. ஜப்பன் ஜபர பரவலை தடுப்பதற்காக 30 வருடங்களுக்கு அண்ணளவான காலத்திற்கு முன் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த பூச்சி வெற்றிகரமாக இல்லாதிருந்ததுடன், அதற்குப் பதிலாக ஆராய்ச்சி மூலம் அல்லது வேறு முறைமையின் மூலம் அந்த ஜப்பன் ஜபர பரவலை தடுப்பதற்காக பொருளாதார ரீதியில் வெற்றிகரமான முறைமையொன்று இது வரையிலும் உரிய பொறுப்பு வாய்ந்த நிறுவனத்தினால் சமர்ப்பிப்பதற்கு தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஆக்கிரமிக்கும் நீர்த் தாவரங்கள் நீர்ப்பாசன முறைமையில் இருந்து அகற்றப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

**5. நல்லாளுகை**

---------------------

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

--------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| **-----------------------------------------------** | **---------------** | **------------------------------------** |
| நீர்ப்பாசன திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு பிரிவில் 07 பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை 19 ஆக இருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நியமிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 13 ஆக இருந்தது. அதன் பிரகாரம் வெற்றிட பதவியணியினரின் எண்ணிக்கை 06 ஆகும். | உள்ளக கணக்காய்வு பிரிவின் செயற்திறனை அபிவிருத்தி செய்வதற்காக வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

## 6. மனிதவள முகாமைத்துவம்

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நீர்ப்பாசன திணைக்களத்தின் அமைய தொழிலாளர்களாக சேவையாற்றிய ஊழியர்கள் 2014 நவம்பர் 12 ஆம் திகதிய 25/2014 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்ந்த சேவையில் நியமிக்கப்பட்டிருந்தனர். 2020 பெப்ரவரி 01 ஆம் திகதி வரையில் அந்த ஊழியர்களுக்கிடையே 261 பேர்கள் கட்டாய நிரந்த சேவைக்காலத்தில் 10 வருடங்களை விஞ்சாதிருக்கும் போது 60 வயதைப் பூர்த்தி செய்து ஓய்வு பெற்றுச் செல்வதற்கு இருந்தனர். | ஓய்வூதிய கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் தகைமை பெறுகின்ற ஊழியருக்கு ஓய்வூதிய சம்பளங்களை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன், ஓய்வூதிய உரித்திற்காக தகைமை பெறாத அரசாங்கத்தின் சேவையில் இருக்கின்ற ஊழியர்கள் தொடர்பாக ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |